بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/09/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் போர் தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சங்கள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பத்ர் போருக்குப் பிறகு நடந்த நிகழ்வுகள் எடுத்துரைக்கப்பட்டு வந்தன. இந்த நிகழ்வுகளில் நமக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் நிகழ்வுகள் குறித்து தெரிய வருகின்ற அதே வேளையில், வரலாற்றைப் படித்தோமே ஆயின், சில வரலாற்று விஷயங்களும் தெரிய வருகின்றன. சில தவறான அறிவிப்புகளும் அடையாளம் காணப்படுகின்றன. அவை அந்நியர்களுக்கு முன்னால் இஸ்லாத்தின் தவறான முகத்தை எடுத்து வைத்துள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விஷயத்தில் பலனடைகின்றனர். மேலும், பயங்கரவாதத்தை விரும்பும் முஸ்லிம்கள் தம்முடைய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான நோக்கத்தைப் பெறுகின்றனர்.

இன்று நான் எடுத்துரைக்கப் போகும் சம்பவங்களில் முதல் சம்பவம் உமைர் பின் வஹப் உடையது. அவர் போருக்குப் பிறகு தன்னுடைய மற்றும் இணைவைப்பாளர்களுடைய தோல்விக்குப் பழிவாங்குவதற்காக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்தார். ஆனால், அங்கு அல்லாஹ்வின் நியதி வேறுவிதமாக இருந்தது. அது அவருக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு வழங்கியது.

இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பத்ரின் கைதிகளில் வஹப் பின் உமைரும் இருந்தார். அவருடைய தந்தை உமைர் குறைஷியர்களின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். அதாவது, உமைர் பின் வஹப். ஒருமுறை உமைர் பின் வஹபும் ஸஃப்வான் பின் உமையாவும் ஹத்தீம் எனும் இடத்திற்கு அருகில் அமர்ந்து பத்ர் யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வி மற்றும் குறைஷிய தலைவர்களின் அழிவு குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

உமைர் கூறினார்: 'எனக்கு ஒரு மனிதனுடைய கடனைத் திருப்பி செலுத்தும் பொறுப்பு இல்லாமல் இருந்திருந்தால், எனக்குப் பின்னால் என்னுடைய மனைவி மக்கள் பற்றிய கவலை எனக்கு இல்லாமல்

இருந்திருந்தால், நான் முஹம்மத் [(ஸல்)] அவர்களைக் கொன்றிருப்பேன். ஏனென்றால், என் மகன் சிறைபிடிக்கப்பட்டு அவர்களின் கைகளில் உள்ளான் என்பதனால், நான் அங்கு சென்று சேர்வதற்கான காரணமும் இருக்கிறது.'

இதைக் கேட்டதுமே ஸஃப்வான் இரண்டு விவகாரங்களையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, 'நீ முஹம்மத் [(ஸல்)] அவர்களைக் கொன்று விடு' என்று கூறினான். நவூதுபில்லாஹ் (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்).

உமைர் ஸஃப்வானிடம், 'எனக்கும் உனக்கும் இடையில் நடந்த இந்த விவகாரத்தை ரகசியமாக வைத்திரு' என்று கூறினார். ஸஃப்வான் வாக்குறுதி அளித்து விட்டான். உமைர் தன் வாளுக்குப் பட்டை தீட்டினார். அதில் விஷத்தைத் தோய்த்தார். அதற்குப் பிறகு, மக்காவிலிருந்து புறப்பட்டு மதீனாவுக்கு சென்றடைந்தார். மதீனாவுக்கு சென்றடைந்ததும் அவர் நபவீ பள்ளிவாசலுக்கு அருகில் தமது ஒட்டகத்தை அமர வைக்க, அதைப் பார்த்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இறைவனின் எதிரியான இவர் நிச்சயமாக ஏதோ ஒரு தவறான எண்ணத்துடன் வந்திருக்கிறார்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்களின் உயர்வான அவைக்கு வந்து, 'இறைத்தூதர் அவர்களே! உமைர் பின் வஹப் உருவிய வாளுடன் வந்திருக்கிறார்' என்று பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவரை என்னிடம் அழைத்து வாருங்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை அன்னாரிடம் அழைத்து வந்தார்கள்.

உமைர் அறிவீன வழக்கப்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு சலாம் (வாழ்த்து) கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உமைரே! இறைவன் எங்களுக்கு உங்களுடைய இந்த அறிவீனமான சலாமை விடச் சிறந்த சலாமைக் கற்றுக் கொடுத்துள்ளான்' என்று கூறினார்கள். உமைர் தான் வந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு, 'நான் உங்களிடம் சிறைபட்டுள்ள என் மகன் சம்மந்தமாக வந்திருக்கிறேன்' என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அப்படி என்றால், இந்த வாளைக் கொண்டு வந்த நோக்கம் என்ன?' என்று கேட்டார்கள். ஆனால், உமைர் மீண்டும், 'நான் சிறைபிடிக்கப்பட்டுள்ள என் மகன் பற்றி பேச வந்துள்ளேன்' என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'இல்லை, மாறாக, நீயும் ஸஃப்வான் பின் உமையாவும் ஒருநாள் ஹத்தீமுக்கு அருகில் அமர்ந்து பத்ரில் கொலையுண்டவர்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தீர்கள்' என்று கூறினார்கள்.

இதைக் கூறிய பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் (உமைர் மற்றும் ஸஃப்வான் ஆகிய) அவர்கள் இருவருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் முழுவதையும் எடுத்துக் கூறி விட்டார்கள். இந்த அனைத்தையும் கேட்ட உமைர் வியந்து போனார். மேலும், உடனடியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். உமைர், 'நாங்கள் இருவரும் இதைப் பேசும் போது, அங்கு மூன்றாவது நபர் யாரும் இருக்கவில்லை; எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்

(ஸல்) அவர்களுக்கு இந்த விஷயத்தை அல்லாஹ்வையன்றி வேறு யாரும் கூறவில்லை' என்றார். பிறகு, உமைர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் மக்காவுக்குத் திரும்பி செல்வதற்கும் மக்கத்தினருக்கு இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுவதற்கும் அனுமதி கோரினார். அதை ஹுஸூர் (ஸல்) அவர்கள் வழங்கி விட்டார்கள்.

மறுபுறம் ஸஃப்வான் மக்காவில் ஒவ்வொருவரிடமும், 'அண்மையில் நான் உங்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நற்செய்தியைக் கூறுவேன் என்றால், அதன் மூலம் நீங்கள் பத்ரின் பெரும் வேதனையை மறந்து விடுவீர்கள்' என்று கூறினான். அவன் (மக்காவுக்குள்) வருகின்ற ஒவ்வொருவரிடமும் உமைரின் செயல்பாடுகள் குறித்து விசாரித்து வந்தான். கடைசியில் ஒருநாள் அவனுக்கு உமைர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தகவல் கிடைத்து விட்டது. உமைர் மக்கா சென்றடைந்ததும் அவர் நேராகத் தன் வீட்டிற்குச் சென்றார். வீட்டு மக்களுக்கு இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்தார். பிறகு, ஸஃப்வானிடம் சென்றார். அவனுக்கு இஸ்லாத்தின் உண்மைத்துவத்தைத் தெரியப்படுத்தினார். ஸஃப்வான் உமைர் கூறிய விஷயங்களுக்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை; அவர் பக்கம் கவனமும் செலுத்தவில்லை.

பத்ருக்குப் பிறகு, சில மக்கள் முஸ்லிம் ஆனார்கள். ஆனால், அவர்கள் நயவஞ்சகமான வடிவம் கொண்டிருந்தார்கள். அவர்களில் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூலும் ஒருவனாவான். இவன் ஹுஸூர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு) வருகை தருவதற்கு முன்பு அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் (ஆகிய இரு) கோத்திரங்களுக்கு சேர்த்து தலைவன் ஆக இருந்தான். ஆனால், ஹுஸூர் (ஸல்) அவர்கள் வருகை தந்த பிறகு இது சாத்தியப்பட முடியாமல் போனது. எனவே, இவன் இஸ்லாத்திற்கு எதிராக மறைவான சதிகள் செய்ய ஆரம்பித்து விட்டான்.

பத்ரில் இருந்து திரும்பி வந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பனூ ஸுலைம் மற்றும் பனூ ஃகத்ஃபான் (கோத்திரத்து) மக்கள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது. இந்தத் தகவல் கிடைத்ததுமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ ஸுலைம் மற்றும் பனூ ஃகத்ஃபானை நோக்கி தாம் முதலில் செல்லத் தீர்மானித்தார்கள். மேலும், கண்ணியத்திற்குரிய முந்நூறு சஹாபாவுடன் அன்னார் புறப்பட்டு விட்டார்கள்.

ஸுலைம் மற்றும் ஃகத்ஃபான் (ஆகிய) கோத்திரங்களுக்கு முஸ்லிம்களின் இந்த திடீர் வருகை பற்றிய செய்தி கிடைத்ததும் அவர்கள் அச்சத்திற்குள்ளாகி, (அங்கிருந்து) ஓடி மலைக்குன்றுகளில் சென்று ஒளிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் கண்ணியத்திற்குரிய சஹாபாவும் சில நாள்கள் அங்கு தங்கியிருந்தார்கள். அந்த இடைபட்ட காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எதிர்த்து வருவதற்கு எவருக்கும் துணிச்சல் வரில்லை.

இந்த மக்கள் போர் புரியும் எண்ணத்தில் வந்திருந்ததால், அந்தக் காலகட்டத்தின் வழக்கப்படி அவர்களுடைய பொருள்களைக் கைபற்றிக்

கொள்வது ஆகுமானதாக இருந்தது. எனவே, ஓர் அறிவிப்புப்படி இந்தப் போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் போர்ச் செல்வமாக ஐந்நூறு ஒட்டகங்கள் கிடைத்தன. இந்த(ப்போர்)த் திட்டம் தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பதினைந்து நாள்கள் மதீனாவை விட்டு வெளிய இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்துக்குப் பிறகு, ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் இறைவனின் ஆணைக்கு ஏற்ப ஈதுல் ஃபித்ர் (நோன்பு பெருநாள்) கொண்டாடினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருபெருநாள்களைக் குறித்தும் சஹாபாவிடம் கூறினார்கள்: 'இவ்விரண்டிலும் எவரும் நோன்பு நோற்கக்கூடாது. மாறாக, உண்ணுங்கள்; பருகுங்கள் மற்றும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுங்கள்.' இருபெருநாள்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குக் கிழக்கு திசையில் அமைந்துள்ள பெருநாள் திடலுக்குச் செல்வார்கள்.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாத்தின் பெருநாள்கள் தமக்குள் ஒரு விநோதமான மேன்மையைக் கொண்டிருக்கின்றன. அவற்றால் இஸ்லாத்தின் உண்மைத்துவம் மீது பெரிதும் ஒளிபடுகிறது. மேலும், எவ்வாறு இஸ்லாம் முஸ்லிம்களின் ஒவ்வொரு பணியையும் இறைவனை நினைவு கூர்தலோடு இணைக்க விரும்புகிறது என்பதை அனுமானிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.

பத்ர் போருக்குப் பிறகு மற்றும் உஹது போருக்கு முன்னர் ஐயத்திற்குரிய இரண்டு சம்பவங்கள் பற்றியும் குறிப்பு கிடைக்கிறது. அவற்றை மேலோட்டமாகப் பார்த்தாலுமே அவை கட்டுக் கதைகள் என்பது தெளிவாகத் தெரிய வருகிறது.

முதல் சம்பவம் அஸ்மா பின்த் மர்வான் எனும் ஒரு யூதப் பெண்ணைக் கொன்றது பற்றியதாகும். அதாவது, அவளைக் குறித்து, அவள் கொல்லப்பட்டாள் என்று கூறப்படுகிறது.

இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமைர் பின் அத்தீ அவர்கள் கண்பார்வையற்ற ஒரு சஹாபி ஆவார். அவை ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டின் ரமலானின் கடைசி நாள்களாக இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமைர் பின் அத்தீ (ரலி) அவர்களை யூதப் பெண்ணான அஸ்மா பின்த் மர்வானை நோக்கி அனுப்பினார்கள்.

அவள் இஸ்லாத்தை ஏசி வந்ததனாலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்ததாலும், கவிதைகள் கூறிவந்ததாலும் (அவளை நோக்கி இந்த சஹாபியை) அனுப்பியதாகக் கூறப்படுகிறது. ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் இரவின் இருட்டில் அவளுடைய வீட்டிற்குள் நுழைந்தார்கள். அந்தப் பெண்ணுக்கு அக்கம் பக்கம் அவளுடைய பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும், அவள் தனது ஒரு பிள்ளைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் அவளுடைய நெஞ்சில் வாளை வைத்து அவளைக் கொன்று விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் உமைர் (ரலி) அவர்கள் திரும்பி வந்து

ஃபஜ்ர் தொழுகையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விசாரித்த போது, தாம் அஸ்மா பின்த் மர்வானைக் கொன்று விட்டதாக அவர்கள் கூறினார்கள்.

ஓர் அறிவிப்புப்படி, ஹஸ்ரத் உமைர் பின் அத்தீ (ரலி) அவர்கள் அஸ்மா பின்த் மர்வானைக் கொன்றதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாவிடம், 'அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவி புரிந்த ஒரு நபரை நீங்கள் காண விரும்பினால், உமைர் பின் அத்தீயைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள்.

இஸ்திஆப் எனும் நூலில் உமைர் பின் அத்தீ அவர்களின் வாழ்க்கை நிலைகளின் கீழ் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அவர்கள் தம்முடைய சகோதரியையும், அவள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏசி வந்ததால் கொன்று விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* சில வரலாற்று மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இந்த சம்பவம் கிடைக்கிறது. ஆனால், சிஹாஹ் சித்தாஹ் மற்றும் ஹதீஸ்களின் எந்தவொரு நம்பகமான நூல்களிலும் இதைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. உண்மை நிகழ்வு என்னவென்றால், பிற்காலத்தில் வந்த சில மக்கள் இத்தகைய கற்பனையான மற்றும் கதைகட்டப்பட்ட சம்பவங்களுக்குத் தம்முடைய நூல்களில் இடமளித்தது மட்டுமின்றி, அதையும் தாண்டி, தூதரை அவமதிப்பதற்கு தண்டனையாகவும் முன் வைத்தார்கள்.

இன்றைய காலத்து முல்லாக்கள் இப்படிப்பட்ட சம்பவங்களை வைத்து, 'தூதரை அவமதிப்பவரைக் கொன்று விடுங்கள்' என்று ஆதாரம் கொடுக்கிறார்கள். ஆனால், தூதரை அவமதிப்பதற்கான எந்தவொரு வகையான தண்டனையும் இஸ்லாத்தில் இல்லை; இது போன்ற சம்பவங்களுக்கு எந்த உண்மைத்துவமும் இல்லை.

உதாரணமாக, இந்த ஹதீஸை அறிவுடன் ஆராய்ந்து பார்த்தால், அறிவிப்பு வரிசை அடிப்படையில் இந்த ஹதீஸ் பலவீனமானது என்பது தெரியவருகிறது. இன்னும் சொல்வதாயின், இதை மவ்ளூஃ (இட்டுக்கட்டப்பட்டது) என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் அறிவிப்பாளர்களில் ஒருவன் முஹம்மத் பின் அம்ர் ஆவான். அவன் பொய்யுரைப்பவன் ஆவான்.

அறிவுப்பூர்வமாக பார்த்தாலும் இந்த அறிவிப்பின் மீது பல கேள்விகள் எழுகின்றன. உதாரணமாக, சஹாபி கண்பார்வை அற்றவராக இருந்தும் அந்தப் பெண்ணின் வீட்டிற்குத் தனியாக எப்படிச் சென்றடைந்தார்கள்? இரவின் இருளில் (அந்தப்) பெண்ணை எப்படித் தேடிக் கண்டுபிடித்தார்கள்? தடவி தடவி கண்டுபிடித்தார்கள் என்றால், அப்படியிருந்தும் யாரும் எழுந்திருக்கவில்லையா? அந்தப் பெண் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கிறாள் என்பதை தடவி தடவியே கண்டு பிடித்து விட்டார்களா?

அடுத்து, கொல்லப்பட்ட அவள் மரணத்தை முன்னால் கண்டும் ஒரு கண்பார்வையற்றவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கோ

தடுப்பதற்கோ முயற்சி செய்யவில்லையா? அந்தப் பெண்ணுக்குப் பார்வை இருந்தது. இருந்தும் அவள் எந்தக் கூச்சலும் இடவில்லையா? எந்த எதிர்ப்பையும் காட்டவில்லையா? அந்தப் பெண்ணின் கணவன் அங்கே உறங்கிக் கொண்டிருந்தானே, அவனுக்கும் எதுவும் தெரியவில்லையா? எல்லாவற்றையும் விடப் பெரிய விஷயம் என்னவென்றால், பொதுவாக கண்பார்வையற்றவர்கள் ஓசைகளை வைத்து அடையாளம் காண்பார்கள். யாரும் குரல் கொடுக்காமல் கண்பார்வையற்ற சஹாபிக்கு அந்தப் பெண் அஸ்மா பின்த் மர்வான்தான் என்பது எப்படித் தெரிய வந்தது?

இரண்டாவது அறிவிப்பில் இவ்வாறும் கூறப்பட்டுள்ளது: அந்தப் பெண் பேரீத்தம் பழத்தைக் கொண்டு வருவதற்காக உள்ளே சென்ற போது, பேரீத்தம் பழங்களை எடுப்பதற்காக குனிந்தாள். (பார்வையற்ற) அவர் கூறுகிறார்: நான் வலமும் இடமும் பார்த்தேன். அவளுடைய தலைமீது வாள் வீசி அவளைக் கொன்று விட்டேன்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இது மட்டுமின்றி, பெரும்பாலான அறிவிப்புகளில் பெண்ணின் பெயர், கொன்றவர் பெயர், கொன்ற நேரம் மற்றும் கொன்ற முறைகள் பற்றியும் வேறுபாடுகள் உள்ளன. அவை இந்த சம்பவம் ஒரு புனையப்பட்ட, கட்டுக் கதை என்பதை நிரூபிக்கின்றன.

பயங்கரவாதத்தை விரும்பும் முல்லாக்கள் இது போன்ற கட்டுக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளித்து இஸ்லாத்தின் அழகிய போதனைகளுக்கு அவப்பெயர் ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும், இந்த முல்லாக்கள் இன்றைய நாள்களில் இதே போன்ற கட்டுக் கதைகளை உருவாக்கி அஹ்மதிகளுக்கு எதிராகவும் பயங்கரவாதத்தை வெளிபடுத்தி வருகிறார்கள். மக்களைத் தூண்டி விட்டு வருகிறார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இரண்டாவது சம்பவமும் இத்துடன் ஒத்துப் போகக்கூடியதாகும். அதை இனி எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)